**ஏப்ரல் – 11**

# TNPSC துளிகள்

- சென்னையின் இரண்டாம் விமான நிலையமான பரந்தூர் விமான நிலையத்தினைக் கட்டமைப்பதற்கு மத்திய அரசிடமிருந்து முதன்மை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- டெல்லி அரசானது தேசிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தும் 35வது மாநிலம்/ஒன்றியப் பிரதேசமாக ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவில் அதிகாரப்பூர்வமாக இணைந்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் இந்திய ராணுவம் நிலப்பரப்பிலிருந்து வானிலுள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தரத் தாக்குதல் வரம்பு கொண்ட எறிகணை (MRSAM) அமைப்பின் இராணுவப் பயன்பாட்டு வடிவத்தின் நான்கு ஏவுதல் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளன.
- அரியானாவின் ஹிதேஷ் குலியா, 2025 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடைபெற்ற உலகக் குத்துச்சண்டை கோப்பைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியக் குத்துச் சண்டை வீரர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, போர்ச்சுகலில் உள்ள லிஸ்பன் நகரின் மேயரிடமிருந்து லிஸ்பன் நகரத்தின் 'சிட்டி ஆஃப் ஹானர்' என்ற முக்கியக் கௌரவப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு vs. தமிழக ஆளுநர் வழக்கு


- உச்ச நீதிமன்றமானது தமிழக ஆளுநர் R.N. ரவி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக 10 மசோதாக்களை ஒதுக்கியது "சட்ட விரோதமானது மற்றும் நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட வேண்டியதாகும்" என்று தீர்ப்பளித்துள்ளது.
- நீதிபதிகள் J.P.பர்திவாலா மற்றும் நீதிபதி R. மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு ஆனது ஒரு மனதாக இந்தத் தீர்ப்பை அறிவித்தது.
- அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ், ஆளுநருக்கு எந்த விருப்புரிமையும் இல்லை என்றும், அவர் கட்டாயமாக அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் தான் செயல்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.
- அரசியலமைப்பின் 200வது சரத்து என்பது மசோதாக்களுக்கான ஒப்புதலைப் பற்றிய விதிமுறைகளைக் கொண்டுள்ளது.
- மசோதாக்கள் ஆளுநர்களிடம் சமர்ப்பிக்கப்படும் போது ஆளுநர்களுக்குத் தற்போது நிர்ணயிக்கப் பட்ட காலக்கெடு:
  - ஒப்புதலை நிலுவையில் வைக்கும் பட்சத்தில், ஒரு மாதம்
  - மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு ஒரு மாறாக ஒப்புதலை நிலுவையில் வைக்கும் பட்சத்தில், மூன்று மாதங்கள்
  - ஆளுநர்களால் மறுபரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாக்களுக்கு ஒரு மாதம்
- ஆளுநர் ஒப்புதலை நிலுவையில் வைத்து முழுமையான ரத்து செய்யும் அதிகாரம் அல்லது நிலுவையில் வைக்கும் அதிகாரம் என்ற வாய்ப்பினை மேற்கொள்ள முடியாது என்று நீதிமன்ற அமர்வு கூறியது.

- ஆளுநர், மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல், ஒப்புதலை நிறுத்தி வைத்தல் மற்றும் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அதனை ஒதுக்குதல் போன்ற ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றும் அது கூறியது.
- இரண்டாவது சுற்றில் ஆளுநர் முன் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அவர் அளிக்க வேண்டும் என்றும், இரண்டாவது சுற்றில் உள்ள மசோதா முதல் சுற்றில் இருந்து வேறுபட்டால் மட்டுமே அந்த நடவடிக்கை எடுப்பதில் விதிவிலக்கு இருக்கும் என்றும் அமர்வு கூறியது.
- அரசியலமைப்புத் திட்டம் ஆனது "முழுமையான ரத்து செய்யும் அதிகாரம்" அல்லது "நிலுவையில் வைக்கும் அதிகாரம்" என்ற வாய்ப்பிற்கு இடமளிக்காது என்றும் அமர்வு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க மிகவும் நீண்ட காலம் எடுத்துக் கொண்டதற்கும் உச்ச நீதிமன்றத்தின் (பஞ்சாப் மாநில தீர்ப்பு) முந்தைய தீர்ப்புகளுக்கு "குறைவான மதிப்பு" வழங்குவதற்கும் எந்தவிதமானக் காரணமும் இல்லை என்று அமர்வு கவலையினைக் குறிப்பிட்டது.
- அந்த நீதிமன்ற அமர்வானது, 10 மசோதாக்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப் படுவதாக அறிவிப்பதற்கு அரசியலமைப்பின் 142வது சரத்தின் கீழ் அதன் உள்ளார்ந்த அதிகாரங்களைப் பயன்படுத்தியது.
- முடிவில், நீதிபதி பர்திவாலா, "ஓர் அரசியலமைப்பு எவ்வளவு மிக நல்ல முறையினதாக இருந்தாலும், அதை அமல்படுத்துபவர்கள் நல்ல ஆட்சியாளர்களாக இல்லாவிட்டால், அது மிக மோசமாகவே இருக்கும். ஓர் அரசியலமைப்பு எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், அதை அமல்படுத்துபவர்கள் மிக நல்ல ஆட்சியாளர்களாக இருந்தால், அது நன்றாகவே அமையும்" என்ற டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் கூற்றினைக் குறிப்பிட்டார்.
- ஆளுநர் "பாராளுமன்ற ஜனநாயகத்தின் நிறுவப்பட்ட மரபுகளுக்கு" ஏற்ப செயல்பட வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.
- ஆளுநர் ஓர் அரசியல் செயல்பாட்டாளர் அல்ல, ஆனால் ஒரு "நண்பர், தத்துவ மற்றும் வழிகாட்டி" ஆவார்.

***பின்னணி***

- தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இந்த 12 மசோதாக்கள் ஆனது மாநிலப் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனங்களின் தொடர்பானது.
- 202 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான காலக் கட்டத்தில் அரசியலமைப்பின் 200வது சரத்தின் கீழ் ஆளுநரின் ஒப்புதலுக்காக இவை மாநிலச் சட்டமன்றத்தால் அனுப்பப்பட்டன.
- ஆளுநர் காலவரையின்றி அவற்றை நிலுவையில் வைத்திருந்தனர்.
- இறுதியாக, 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆளுநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத பட்சத்தில் அவருக்கு எதிராக மாநில அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகிய போது, ஆளுநர் அதில் இரண்டு மசோதாக்களை மிக விரைவாக குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பியதோடு அதில் மீதமுள்ள 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் ஏதும் அளிக்காமல் அவற்றை நிறுத்தி வைத்தார்.
- மாநிலச் சட்டமன்றம் ஆனது சில நாட்களுக்குள் ஒரு சிறப்பு அமர்வின் மூலம் அந்த 10 மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி, அதனை மீண்டும் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பியது.
- 200வது சரத்தின் முதல் விதிமுறையின் கீழான ஒரு நடைமுறையைப் பின்பற்றுவதாக உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசு வாதிட்டது.
- ஆளுநர் 10 மசோதாக்களையும் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பினார்.

- பின்னர் குடியரசுத் தலைவர் ஒரு மசோதாவுக்கு மட்டும் ஒப்புதல் அளித்து விட்டு, ஏழு மசோதாக்களை நிராகரித்து, மீதமுள்ள இரண்டு முன்மொழியப்பட்ட மசோதாக்களை தனது கருத்தில் கொள்ளாமல் ஒதுக்கினார்.





## 2025-26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கடன் வாங்கும் திட்டம்

- 2025-26 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 20,000 கோடி ரூபாய்களை கடன் வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- இது இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்ட மாநிலங்களின் குறியீட்டுச் சந்தைக் கடன் பட்டியலின் படி திட்டமிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டுகின்றன.
- இந்தப் பத்திரங்களுக்கான ஒரு ஏலம் ஆனது இந்திய ரிசர்வ் வங்கியினால் நடத்தப் படுகிறது.
- பத்திரங்கள் பல்வேறு நிறைவு காலக் கட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன மற்றும் அதன் கால நிறைவின் போது மாநிலங்கள் வட்டியுடன் அசலையும் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- இந்தக் கடன்களைப் பெறுவதற்கும் திருப்பிச் செலுத்துவதற்குமான மதிப்பீடுகள் இந்திய அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட ஒட்டு மொத்தக் கடன் உச்சவரம்பின் அடிப்படையில் இறுதி செய்யப்பட்டுள்ளன.
- 2025-26 ஆம் ஆண்டில் மொத்தம் 1,62,096.76 கோடி ரூபாய் கடன் வாங்கவும், 55,844.53 கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்தவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- இதன் ஒரு விளைவாக, 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப் படி நிலுவையில் உள்ள கடன் தொகை 9,29,959.30 கோடி ரூபாயாக இருக்கும்.
- 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில், மொத்த மாநில உள்நாட்டு


உற்பத்தியில் (GSDP) கடன் விகிதம் 26.07% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- இது 15வது நிதி ஆணையத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 28.70% என்ற ஒரு இலக்கிற்குள் இருந்தது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் (ஜனவரி மாதம் வரை), இந்திய ரிசர்வ் வங்கித் தரவுகளின் படி, தமிழ்நாட்டின் மொத்த சந்தை கடன் 88,025 கோடி ரூபாயாக இருந்தது.
- திருப்பிச் செலுத்துதல்களை ஈடு செய்த பிறகு, நிகரக் கடன்கள் 60,175 கோடி ரூபாயாக இருந்தது.
- 2025-26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மிக அதிகபட்சமாக 50,000 கோடி ரூபாய் மதிப்பிலான மொத்த கடன்களை மகாராஷ்டிரா பெற்றுள்ளது.
- 2025-2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெறப் பட்டு வரும் கடன்களில் பீகார், குஜராத், மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை சுமார் நான்கில் மூன்று பங்கைக் கொண்டுள்ளன.




# தேசியச் செய்திகள்

## தொழில்துறைகளின் வகைப்பாடு – CPCB





- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது, மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களை 'நீலம்' என்ற புதியதொரு நிற வகைப்பாட்டுடன், தொழில்துறைகளின் திருத்தப் பட்ட வகைப்பாட்டை ஏற்க உத்தரவிட்டுள்ளது.

- அவை கழிவு நிரப்பு நிலப்பரப்புகளைப் பராமரிப்பது அல்லது உயிரி முறைக் கழிவுப் பிரித்தெடுப்பு ஆகியவற்றில் ஈடுபடுவது போன்ற "மிக அத்தியாவசியச் சுற்றுச்சூழல் சேவைகள்" என்று அழைக்கப்படுகின்றன.
- "நீல வகைத் துறை" என்பது தொழில்துறைகள் மேலும் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் செல்லுபடியாகும் வகையிலான செயல்படுவதற்கான ஒப்புதலாகும்.
- திருத்தப்பட்ட ஒரு முறையின்படி, மாசுக் குறியீட்டின் பின்வரும் வரம்புகளின் மீதான அடிப்படையில் தொழில் துறையின் வகையானது தீர்மானிக்கப்படுகிறது : சிவப்பு: மாசுபாட்டுக் குறியீடு-PI> 80; ஆரஞ்சு: 55≤PI<80; பச்சை: 25
- வெள்ளை வகைத் தொழில்துறைகள் குறைந்தபட்ச மாசுபாட்டுத் திறன் கொண்டவை என வரையறுக்கப்படுகின்றன.
- மாசுபடுத்தும் திறனை அடிப்படையாகக் கொண்டு தொழில்துறைகளை மறுவகைப் படுத்துவதற்காக CPCB ஆனது 2016 ஆம் ஆண்டில் இந்த வகைப்பாட்டை அறிமுகப் படுத்தியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## POEM-4 விண்கல பகுதி மறு நுழைவு

- இஸ்ரோ நிறுவனத்தினால் விண்ணில் ஏவப்பட்ட PSLV-C60 (PSLV சுற்றுப்பாதை ஆய்வுப் பெட்டகம் - POEM-4) கலத்தின் மேல் நிலை (PS4) விண்வெளிப் பெட்டகமானது மிகவும் சமீபத்தில் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்தது.
- இஸ்ரோவின் PSLV-C60 ஆனது, இரட்டை SPADEX செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவியது.
- POEM-4 விண்கலமானது மொத்தம் 24 கருவிகளை (இஸ்ரோ நிறுவனத்தின் 14 கருவிகள் மற்றும் பல்வேறு அரசு சாரா நிறுவனங்களின் (NGE) 10 கருவிகள்) சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது.
- விண்வெளிக் குப்பைகளின் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான இஸ்ரோவின் உறுதிப்பாட்டில் இது மற்றொரு சாதனையாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் சிறிய தேன் கூடு வண்டு

- உலகளவில் தேனீக்கள் தொழில் துறையினை நன்கு அச்சுறுத்தும் ஒரு அயல் அல்லது

பூர்வீகம் சாரா வண்டு இனமானது இந்தியாவில் முதல் முறையாக பதிவு செய்யப்பட்டு உள்ளது.

- மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு தேனீ வளர்ப்புத் தோட்டத்தில், ஐரோப்பிய தேனீக்களின் அல்லது அபிஸ் மெல்லிஃபெரா சற்று பெரியக் கூட்டத்தில் சிறிய தேனடை வண்டு (ஏதினாடுமிடா) பதிவு செய்யப்பட்டது.
- 1867 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் துணை-சஹாராப் பகுதியில் இது பதிவு செய்யப் பட்டதிலிருந்து, அது கண்டங்கள் முழுவதும் பரவி அழிவை ஏற்படுத்தியுள்ளது.
- ஆசியாவில், பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்திற்கும் முன்பே பிலிப்பைன்ஸ், தென் கொரியா மற்றும் சீனாவில் இது பதிவு செய்யப்பட்டது.
- இந்த இனங்கள் ஆனது மிகவும் வேகமாக பெருகி பரவக்கூடும் என்பதால், அவை தேனீ வளர்ப்புத் தொழிலுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு 2000-2023 அறிக்கை

- 'பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு பதிவில் உள்ளப் போக்குகள் 2000-2023' என்ற தலைப்பிலான அறிக்கையானது, WHO, UNICEF, UN மக்கள்தொகை நிதியம், உலக வங்கி மற்றும் UN பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (மக்கள்தொகைப் பிரிவு) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- நைஜீரியாவில் மிக அதிக எண்ணிக்கையிலான பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு பதிவாகியுள்ளன என்பதோடு மேலும் 2023 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட உலகளாவிய 'பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்புகளில் கால் பங்கிற்கும் அதிகமானவை (சுமார் 28.7 சதவீதம்), தோராயமாக 75,000 உயிரிழப்புகள் இங்கு பதிவானவை ஆகும்.

- 2023 ஆம் ஆண்டில், இந்திய நாடானது சுமார் 19,000 உயிரிழப்புகளுடன் கூடிய காங்கோ ஜனநாயகக் குடியரசிற்கு (DRC) சமமாக உலகிலேயே மிகவும் அதிக எண்ணிக்கையில் 'பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்புகள் பதிவான இரண்டாவது நாடாக இடம் பெற்று உள்ளதோடு நைஜீரியாவிற்கு அடுத்தபடியாகவும் அது இடம் பெற்றுள்ளது.
- இது ஒவ்வொரு நாளும் 52 உயிரிழப்புகளாகப் பதிவானது.
- இந்தியாவின் 'பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது, 2000 ஆம் ஆண்டில் 362 ஆக இருந்தது என்பதோடு இது 2023 ஆம் ஆண்டில் 80 ஆகக் குறைந்தது என்ற நிலையில் இது அந்தக் காலக் கட்டத்தில் 78 சதவீதக் குறைவைக் குறிக்கிறது.
- இந்த நான்கு நாடுகளும் ஒரு சேர, 2023 ஆம் ஆண்டில் உலகளாவியப் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதத்தில் சுமார் பாதி (47 சதவீதம்) பங்கினைக் கொண்டு உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் சீனாவில் சுமார் 1,400 பேறு காலத் தாய்மார்கள் உயிரிழப்புகள் மட்டுமே பதிவானது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★